**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 02 April-June 2024**

# குறுந்தொகையில் நீர்

**மோ.விஜய்**

முனைவர் பட்ட ஆய்வாளர்

மன்னர் சரபோசி அரசுக் கலைக்கல்லூரி (தன்னாட்சி) தஞ்சாவூர்.

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரி)

ஆய்வு நெறியாளர்: **முனைவர் த.இளஞ்செழியன்**

## முன்னுரை

சங்ககாலம் தமிழர்களின் பொற்காலம் எனப்படுகிறது. அக்காலத்தில் தொகுத்து வழங்கிய நூல்கள் தமிழ் மக்களின் வாழ்வியலைப் பறைசாற்றுவதாக அமைவதே அதற்கு காரணமாகும். மனித வரலாற்றில் நீர் முதன்மையான அடிப்படை உயிர்ப்புப் பொருளாக இருக்கிறது. தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை எந்நாளும் நீர் சார்ந்த மனித வாழ்வியல் தெளிவுபடுத்தும். ‘நீர் இன்றி அமையாது உலகு’ என்னும் வள்ளுவரின் வாக்கின் மூலம் நீரின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது. நிலம் உண்டாவதற்கு முன்னரே நீர் உருவாகிவிட்டது என்பதை,

**…… …… …… முதுநீர்ப்**
**புணரி திணைக்கும் (குறுந்.299:1-2)**

என்ற குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது. சங்க கால மக்களின் வாழ்வியல் கூறுகள் நீரினை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது என்பதையும், அவர்களுடைய அன்றாட நிகழ்வுகளிலும், கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம் முதலானவற்றில் நீரின் பங்கீடு குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொதுப் பார்வையில் நீர்

நீர் என்பது ‘$H_2O$.’என்ற மூலக்கூறின் அடிப்படையில் உருவானதொரு சேர்மம் என்று அறிய முடிகின்றது. நீர் என்பது நீர்மை என்ற பண்பின் அடிப்படையில் உருவானப் பெயர்ச்சொல். நீர்த்து இருத்தல், நீர்த்துப் போகுதல் அல்லது நீர்த்துக் காணப்படுதல் என்பது இதன் தன்மை. அதாவது இயல்பு. நீர்மையிலிருந்து உருவானதால் நீர் என்ற இச்சொல் உணர்ந்து கொள்ளப் படுகின்றது. உலகில் உள்ள பொருட்களிலேயே நீர் மட்டும் திரவ நிலையிலும்,‘பனி’ என்ற திடப் பொருள்நிலையிலும்,‘நீராவி’என்ற வாயுப் பொருள் நிலையிலும் வேறுபடுத்தி அறியப்படுகின்றது.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் நீர் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டமைந்த பற்பல சொற்கள் காணப்படுகின்றன. தமிழர் மிகவும் தொன்மையான நிலையில் நீரை வேறு பெயர்களாலும் நீர் நிலைகளை வேறுபடுத்தியும் அறிந்திருந்தனர். பிங்கல நிகண்டானது நீரைக் குறிக்கின்ற ஐம்பது சொற்களைப் பதிவு செய்துள்ளது. தமிழ் மக்கள்; நீரை வகைப்படுத்தும்போது ஐவகையாகக் கூறுகின்ற பழக்கமுண்டு.

தொல்காப்பியர் வகுத்துரைக்கின்ற எட்டு வகையான கருப்பொருள்களில் நீர்நிலை பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இதனை,

**தெய்வம் உணவே மாமரம் புட்பரை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.பொருள்.அக.நூ.20)**

என்ற நூற்பா விளக்குகிறது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் விளக்கம் அளிக்கும்போது ‘பிறவும் என்றதனால்’ முல்லைக்குக் கான்யாறும்; குறிஞ்சிக்குச் சுனைநீரும் அருவி நீரும்; பாலைக்கு அறுநீர்க் கூவலும் அறுநீர்ச் சுனையும்; மருதத்திற்கு ஆற்று நீரும் பொய்கை நீரும்; நெய்தற்குக் கேணி நீரும் கடல் நீரும் என ஐந்து திணைகளுக்கான நீர்நிலைகளைச் சுட்டுகிறார்.

**உழவும் உணவும்**

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மனிதனுக்கு மிகவும் தேவை. இவை அனைத்தும் விவசாயத்தின் அடிப்படையில் பெற வேண்டும் உணவு இல்லையெனில் எவ்வுயிரும் உயிர்வாழ முடியாது. இவ்வுலகம் தன்னிலை திரியாமல் இருக்க நீர்ப்பதத்தோடு கூடிய மண் இன்றியமையாததென்பதைப் பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். உயிர்கள் வாழ உணவு எவ்வளவு இன்றியமையாத தேவையோ அதைப்போல இந்நிலம் வளமாக இருக்க நீர் இன்றியமையாத மூலமாகும். இதனை,

**நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத்தோரே**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே (புறம். பா.18 அடி:18-20)**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. உழவுத்தொழில் செய்ய நீர் இன்றியமையாத ஒன்று. சங்ககால மக்கள் எப்பொழுதும் நீர் கிடைக்கப்பெரும்

இடங்களிலும் நீர் நிலைகளுக்கு அருகிலேயும் உழவுத்தொழிலை மேற்கொண்டனர். இதன் காரணமாக நேரமும் செலவும் மிச்சப்படும். சிறுக்குடில்களில் வாழக்கூடிய நீரின் உதவியினைக் கொண்டு மலைநெல்லை விதைத்தனர் என்பதை,

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்தப்**
**பருஇலைக் குளவியொடு பசுபரல் கூட** **(குறுந்.100:1-2)**

என்ற பாடலடிகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் நீர் நிலைகளை அருகே உடைய நாடு (ஊர்) செழிப்பாக இருக்கும் என்பதை,

**…… …… …… நற்றேர்ப்**
**பொய்கை ஊர் கேண்மை** **(குறுந்.61:4-5)**

என்றும், ஊரினைச் சார்ந்து இருக்கக்கூடிய வயலில் உள்ள பயிர்கள் பொய்கை நீரின் மூலமாகச் செழுமையடைந்தது என்பதை,

**கழனி மாஅத்து விளைந்து உருநீம்பழம்**
**பழன வாளை** **(குறுந்.8:1-2)**

என்ற பாடலடிகள் எடுத்தியம்பியுள்ளது. உலகில் உள்ள எல்லா நீர்நிலைகளுக்கும் தன்மையாக அமைவது மழையாகும். மழையே எல்லா உயிர்களுக்கும் அடிப்படை. மழைப்பொழியும் போது குளம், குட்டை, பொய்கை, அருவி என எல்லாம் நிரம்பி அவற்றின் மூலமாக நீரினைச் சிறுக சிறுகத் தந்து மற்ற உயிரினை வாழச்செய்யும். வானிலிருந்து மழைத்துளி வீழாவிட்டால் பசும்புல்கூட இவ்வுலகைக் காண்பது அரிது என்பதை,

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது** **(குறள்.16)**

என்று வள்ளுவர் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுபடுத்தியுள்ளார். குறிஞ்சி நில மக்கள் மழைபொழிகின்ற போது காலம் கடத்தாமல் நெல்லினை விதைத்தனர். மேலும் மழை இல்லாத காலங்களில் அருவியிலிருந்து வரக்கூடிய நீரின் மூலமாக அதனை விளைவித்தனர் என்பதை,

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**
**அருவியின் விளைக்கும்** **(குறுந்.371:2-3)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாகத் தம் கண்முன்னே புலவர்கள் காட்சிப்படுத்துகின்றன. தமிழர்களுடைய பாரம்பரிய உணவு என்று அறியப்படுகின்ற

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

நெல், வரகு, தினை முதலான பயிர்கள் மழையின் உதவியுடன் சங்ககால மக்கள் பயிரிட்டனர். இதனை,

**பழமழைக் கலித்த புதுப்புன வரகின் (குறுந்.220:1)**

**…… பொன்போல் சிறுதினை**
**கிளி குரித்து உண்ட கூழை குருவி (குறுந்.133:1-2)**

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**
**படுஇலைக் குளவியொடு பசுமரல் சுட்டும் (குறுந்.100:1-2)**

**பழமழை பொழித்தெனப் பதன் அழிந்து**
**சிரட்டுக்காய் எண்ணின் சில் பெயற் (குறுந்.261:1-2)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. சிறிய அளவில் விவசாயம் செய்பவர்கள் குறுகியகாலப் பயிரினையே தேர்வு செய்வர். ஏனெனில் அதன் மூலம் வரும் வருவாயினைக் கொண்டே அவர்களுடைய பொருளாதார நிலைப்பாடு காணப்படும். அதனை அனுபவரீதியில் உணர்ந்த பழந்தமிழர்கள் குறுகிய காலப்பயிர்களை விளைவித்தனர். சிறு தினை என்கிற குறுகியகாலப் பயிரினை அருவியின் பயனைக் கொண்டு மலையருகே உள்ள கொல்லையில் விளைவித்தனர் என்பதை,

**…… …… …… சாரல்**
**சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து**
**இரவு அரிவாரின் தொண்டகச் சிறுபறை (குறுந்.375:2-4)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மழையின்மையின் காரணமாக நிலம் வற்றி நீரற்றுக் காணப்படும். நீர் வேட்கையைப் போக்க ‘உகாய்’ என்கிற மரத்தின் பட்டையை மென்று சுவைத்து நீர் வேட்கையைத் தனித்துக் கொள்கின்ற இயல்பு ஆறலைக் கள்வர்க்கும் வழிச் செல்வோருக்கும் இருந்ததை,

**நீர்நசை வேட்கையின் நார்மென்று தனியும் (குறுந்.275:5)**

என்ற பாடலடிப் புலப்படுத்துகின்றது. மேலும் நீரில்லாத பாலைவழியில் செல்வோர் நீர் வேட்கையைத் தனிப்பதற்கு நெல்லிக்காயைத் தின்று தன் தாகத்தைப் போக்கியதை,

**சுரற் தலைப்பட்ட நெல்லிஅம் பசுங்காய்**
**மறப்புலக் குருளை கோள்இடம் சுரக்கும் (குறுந்.209:1-2)**

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இயற்கையின் வரமாக இருக்கின்ற அஃறிணை உயிரினங்கள் நீர் சார்ந்து விளைகின்ற உணவினை விரும்பி உண்ணும். மலைச்சாரலில் விளைந்த பெரிய கதிர்க் கொத்துகளையுடைய தினையைக் கிளிகள் உண்ணவந்ததை,

**…… …… …… சாரல்**
**பிடிக்கை அன்ன பெருங்குரல் நானல்**
**…… …… …… குளரே** (குறுந்.360:4-5)

கோடை காலத்தில் பெண்யானையின் பசியைப் போக்க ஆண்யானை 'யா மரத்தின்' பட்டையை உரித்து அதன் நீரை தன் துணைக்கு அளித்ததையும், அருவியால் தரப்பட்ட இனிய சொறுக்கட்டித் தட்டையை உணவாகக் கிடைத்ததை,

**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென் தினை யாவும் பொளிக்கும்**
**அருவி தந்த நாட்டுதல் எருவை**
**கயம்நாடு யானை கவளம்** (குறுந்.37:2-3)

என்ற பாடலடிகள் விளக்கியுரைக்கின்றன.

## நீர்ப் பாதுகாப்பு

ஒரு நாட்டின் நீர்நிலைகள் என்பவை அந்நாட்டின் உயிர் நாடிகளாக அமைகின்றன. அவ்வகை நீர்நிலைகளை உருவாக்கினால் மட்டும் போதாது. அவற்றை இயற்கைச் சீற்றங்களிலிருந்தும், எதிரிகளிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்தல் வேண்டும். நீர் நிலைகளை உருவாக்குதலும் அவற்றைக் காத்தலும் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ற செயல்களாக அமைகின்றன. மழைக்காலங்களில் வெள்ளம் போன்ற அழிவுகள் ஏற்படுவது இயல்பு. அதன் காரணமாக அணை, ஏரி, குளம் போன்றவற்றின் கரைகள் உடையாமல் பாதுகாக்க காவலர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவ்வகையான நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதன் காரணமாக வரும் விளைவானது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். மழைக்காலத்தில் நீர் நிரம்பிக் காணப்படும் குளத்தின் கரைகளைக் காவலர்கள் உடையாமல் பாதுகாத்தனர் என்பதை,

**மாரிக் குளத்துக் காப்பா ளன்னன்** (ஐங்.நூ.பா.206அடி:2)

என்ற பாடலடி எடுத்தியம்புகிறது. மழைக்காலங்களில் பெய்யும் அதிக மழையின் காரணமாக அருவிகளில் அதிகமான நீர்வரத்து இருக்கும். அது மேலும் வெள்ளமாக

மாறுகின்ற சூழ்நிலையில் அருவியின் அருகே வாழக்கூடிய மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும். அவ்வகையில் அருவிகளுக்கு அருகே தினைப்புனம் காப்பதற்காகச் சிறு காவல் குடில்கள் அமைக்கப்பட்டிருந்தது என்பதை,

**உரையின் தாழ்ந்த வாய்வெள் அருவி**

**……………………**

**இன்னாது இருத்தல்இல் சிறுகுடியோரே** (குறுந். 284:6-8)

என்ற பாடலடிகளில் காணமுடிகின்றது. மழைக்காலங்களில் பொழியும் நீரினை வீண்செய்யாது குளம், குட்டை, வாய்க்கால் முதலியவற்றைச் செயற்கையாக வெட்டி நீரினைச் சேமித்தனர். இவ்வகையான நீர்நிலைகளைப் பாதுகாக்க இன்றளவும் தேக்கு, மருதம், சவுக்கை, ஆத்துப்பூசனம், வேங்கை முதலான மரங்களை நட்டுக் கரைகளைப் பலப்படுத்தும் பழக்கம் உள்ளது. சங்க காலத்தில் அதிகமான நீர்ப் பெருக்கத்தையுடைய குளத்தின் நீர் மோதுகின்ற குளக்கரைகளில் மரங்கள் காணப்பட்டதை,

**இடிகரைப் பெருமரம் போல** (குறுந்.369:7)

என்ற பாடலடி எடுத்தியம்புகிறது. பாதுகாக்கப்பட்ட நீர்நிலை காப்புடைகயம் எனப்பட்டது. கோவில், அரண்மனை முதலான இடங்களில் நீர் அரண் காணப்பட்டது. இதனை மதுரை மாநகரத்தின் கோட்டை மதிலுக்கு வெளிப்புறத்தில் ஆழமான அகழி மதிலைச் சூழ்ந்திருந்நது. இஃது ஆழமும் நீர்நிறைந்தாக இருந்தது. இந்த அகழியை 'மண்ணுரை ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கு' (351) என்று மதுரைக்காஞ்சியும், குண்டு நீர் வரைப்பின் கூடல் (347) என்று புநறநானூறும் கூறுகின்றது.

## நம்பிக்கை, வழிபாடு

பண்டையத் தமிழர்களின் வாழ்வில் இயற்கையின் கொடைகள் சிறப்பிடத்தினைக் கொண்டிருக்கின்றன. அதில் குறிப்பிடத்தக்க ஒன்றான நீர் மட்டும் முதன்மை பொருளாக நான்கு வகையான நிலங்களிலும் இடம்பெறுகின்றன. அருவி, ஆறு, கடல் ஆகியவற்றின் மூலமாக மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடு மற்றும் வழிபாட்டோடு நீர் ஒன்றிப் போவதை அறியமுடிகின்றது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர் இல்லாமல் இவ்வுலகில் தோன்றக்கூடிய ஒரு செல் உயிரினமான 'அமீபா' முதல் எவ்வுயிரியானாலும் வாழ இயலாது என்பதை,

**நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**

**வானின்று அமையா ஒழுக்கு** (குறள்.20)

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பழந்தமிழர்கள் இயற்கையைக் கண்டு அஞ்சியதால் ஐம்பூதங்கள் என்று கூறப்படுகின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றை வழிபடத் தொடங்கினர். இதனைத் தொல்காப்பியரும்,

**வழிபடு தெய்வம் நின்புறங் காப்பப்**

**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து (தொல்.பொருள்.மர.நூ.106)**

என்று குறிப்பிடுகின்றார். வழிபாடு என்ற சொல்லிற்கு வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம் என்று நிகண்டுகளும் அகராதிகளும் புலப்படுத்துகின்றன. இதன் காரணமாக நீரையும் நீர்நிலைகளையும் தெய்வமாகவே வணங்கத் தொடங்கியுள்ளனர். உழவுத் தொழிலினைத் தொடங்குகின்ற மாதத்தில் பெய்யக்கூடிய பெரிய மழையினை அந்நாட்டு மக்கள் அனைவரும் வழிபட்டு ஆரவாரத்துடன் வரவேற்றனர். இதனை,

**தொய்யல் மாமழை தொடங்கலின் அவர்நாட்டுப்**

**பூசல் ஆயம் புகன்றுஇழி அனி (குறுந்.367:4-5)**

என மதுரை மருதன் இளநாகன் எடுத்தியும்பியுள்ளார். சங்ககால மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீரினைத் தரும் கடல் ஆறு போன்றவற்றைக் கடவுளாக வழிபட்டனர் என்பது நாம் அறிந்த ஒன்றே. குன்றுகளில் உற்பத்தியாகும் அருவிகளில் தெய்வீகத் தன்மை உண்டெனக் கருதி வழிபட்டனர். இதனை,

**கடவுள் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த (நற்.பா.34 அடி:1)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். கடையேழு வள்ளல்களில் முதன்மையானவன் பாரி. அவன் கொடையில் சிறந்தவனாகக் காணப்பட்டான். அவனுடைய மலை வற்றாத நீர் வளம் உடையதாகக் காணப்பட்டது. பாரி அறவொழுக்கம் தவறாது பின்பற்றியதன் காரணமாகவே நீர்நிலைகள் நிரம்பிக் காணப்பட்டதாக நம்பப்படுகின்றது.இதனை,

**பாரிபறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்**

**தைஇத் தங்கள் நுண்ணிய தரினும் (குறுந்.196:3-4)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இல்லற வாழ்வினைத் துறந்து துறவு வாழ்வினை மேற்கொள்ளும் அறிவர்கள் முக்காலத்தின் இயல்புகளை அறிந்து கூறுவர். இவர்கள் தன் வாழ்வில் சோறும் நீரும் தவிர மற்ற எவற்றையும் விரும்ப மாட்டார்கள். இதன் மூலமாக நீரினையுடைய புனிதத் தன்மையை அறிய முடிகின்றது. இதனை,

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**ஓர்இல் பிச்சை ஆர மறதி**

**…… …… வெப்பத் தண்ணீர்**

**சேடச் செப்பல் பெயரே தேரா (குறுந்.277:3-5)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. நிகழ்காலத்தில் உடல் உறுப்புதானம், கண்தானம், இரத்ததானம் முதலானவை மிகுந்துக் காணப்படுகின்றன. ஆயினும் அக்காலம் முதல் இக்காலம் வரை உயர்ந்த தானமாக உணவு தானம் உள்ளது. 'தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்' என்கிற பழமொழயை அறியாதோர் எவரும் இலர். அவ்வாறாகச் சங்க காலத்தில் அந்தணர்களுக்குத் தானம் வழங்கப்பெறும் பொருள்களை நீர்வார்த்துக் கொடுக்கும் மரபு சுட்டப்பட்டுள்ளது. இதனை,

**…… …… …… உயர்ந்தோர்க்கு**

**நீரொடு செறிந்த மிச்சல் (குறுந்.233:4-5)**

என்ற பாடலடிகளின் வாயில் அறியலாம். மேலும் மாலை நேரத்தில் செவ்வானம் பூத்தால் மழைப் பொழியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இதனை,

**செவ்வான் செவ்வி கொண்டண்று (குறுந்.108:4)**

என்ற பாடலடி உணர்த்துகிறது. மேற்காணப்பட்ட இவைச் சங்க காலத்தின் எச்சமாக இன்றும் வழக்கத்தில் உள்ளதை உறுதிபடக் கூறமுடியும்.

## நீர் விளையாட்டு

விளையாட்டு, ஆடல், பாடல், உரையாடல் இவை எல்லோருடைய உள்ளங்களையும் கவரக்கூடியது. குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை ஒரு மனிதருடைய வாழ்வில் விளையாட்டு நீடிக்கிறது. ஒரு நாட்டு மக்களின் சீரிய பண்பாட்டை அறிவதற்கு அவர்களுடைய பழக்கத்தில் கொண்டுள்ள விளையாட்டுகளும் துணைபுரிகின்றன. தொல்காப்பியத்தில்,

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**

**அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.பொருள்.மெய்.நூ.11)**

என்ற நூற்பா வாயிலாக விளையாட்டினுடைய முதன்மைப் பாங்கினை அறியமுடிகின்றது. விளையாட்டை நீர் விளையாட்டு, நில விளையாட்டு என இருவகையாகப் பகுப்பர். சங்க இலக்கியத்தில் முப்பத்தேழு விளையாட்டுகள் இருந்தனவாக சு.சிவகாமசுந்தரி சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் என்ற (ப.32) நூலில் தெளிவு படுத்தியுள்ளார்.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

புதுமழைப் பெய்து ஆற்றில் புதுவெள்ளம் வந்தால் அதனை வரவேற்று வணங்கி மகிழ்ந்து விளையாடும் பழக்கம் தமிழர்களிடம் உண்டு. குறுந்தொகை, பரிபாடல் முதலான இலக்கியங்களில் புதுவெள்ளம், ஆற்றின் சிறப்புகள், நீர் விளையாட்டுப் பற்றிய செய்தி குறிப்புகள் இடம்பெறுகின்றன. தலைவன் தலைவி காதல் ஒழுக்கத்தில் ஈடுபடும்போது தலைவன், தலைவிக்கு மலர்க்கொத்துக் கொடுத்து இருவரும் நீர் நிலையில் நீராடினர். இதனை,

**கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி**
**பெரும்புனல் வந்த இருதினை விரும்பி**
**யாம்அஃது ஆயர்கம் சோறும் தான் அஃது**
**அஞ்சுவது உடையார் ஆயினும் (குறுந்.80)**

என்ற பாடல் எடுத்தியம்புகிறது. சங்ககால மக்கள் ஆறு, ஊற்று, கடல், குளம் போன்ற நீர்நிலைகளில் விளையாடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பழந்தமிழர் அருவிகளில் விளையாடுதலை இனிமையாகக் கருதினர் என்பதை,

**பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே (குறுந்.353:3)**

என்ற பாடலடி உணர்த்துகின்றது. கலையை மறந்தும் போய்விட்டோம். பெண்கள் கடல் நீரில் விளையாடினர் என்பதை,

**கடல் ஆடுமகளிர் கானல் இழைத்த (குறுந்.326:2)**

என்ற பாடலடி சுட்டுகின்றது. நீரில் விளையாடும்போது நேரம் விரையமாவது தெரியாது. நீண்டநேரம் நீரில் விளையாடுவதால் கண்கள் சிவந்து உடல் சோர்வாகிவிடும். இதனை நாம் நிகழ்கால வாழ்விலும் காணமுடியும். நெடும்பொழுது நீரில் விளையாடினால் சிவக்காத கண்களும் சிவக்கும் என்பதை,

**நீர்நிடு ஆடின் கண்ணும் சிவக்கும் (குறுந்.354:1)**

என்ற பாடலடி காட்சிப்படுத்துகிறது.

## முடிவுரை

மனித வாழ்வின் இன்றியமையாதத் தேவையாக நீர் உள்ளதைச் சங்க இலக்கிய குறுந்தொகைப் பாடல்கள் தெள்ளிதின் எடுத்தியம்புகிறது. பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்கள் நீரினுடைய தேவையையும், இன்றியமையாமையையும் எடுத்தியம்புவதை மேலே கொடுக்கப்பட்ட ஆய்வின் முடிவாக எடுத்துக் கொள்ளலாம். இவ்வுலகில் உருவான உயிரினங்கள் அனைத்தும் நீரை

மையப்படுத்தியே வாழுகின்றன. இதனைச் குறுந்தொகை நேரடியாகவே எடுத்தியம்பியுள்ளது. சங்ககால மக்கள் நீரோடு இரண்டரக் கலந்து வாழ்ந்தனர் என்றும் நீர்நிலைகளைச் சார்ந்து வாழ்ந்தனர் என்றும் அறியமுடிகின்றது. ஒரு நாட்டினுடைய பாதுகாப்பு என்பது அந்நாட்டினுடைய புறக்காவலைச் சார்ந்து அமையும். அதனைப் போன்றே அந்நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு என்பது நீரை மையப்படுத்தியே அமையும். இவ்வகையான செய்திகள் குறுந்தொகைப் பாடல்களில் காணமுடிகின்றது. இயற்கை மற்றும் செயற்கை நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படுமாயின் மிகப்பெரிய இழப்பும், உயிர்ச் சேதமும் நிகழும் என்பதை உணர்ந்த சங்ககால மக்கள் நீர்நிலைகளுக்குக் காவலர்களை நியமித்திருந்தனர் என்பதைக் குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

காலம் காலமாகத் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படும் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை மற்றும் வழிபாடு பிரிக்க இயலாத ஒன்று. அவற்றில் நீர் மற்றும் நீர்நிலைகள் சார்ந்த வழிபாடு குறிப்பிடதக்க ஒன்றாகும். இவைச் சங்க காலத்தின் எச்சமாக இருப்பது தமிழர்களின் வாழ்வியல் பிணைப்பை எடுத்தியம்புகிறது. மனித வாழ்வில் நீர் விளையாட்டு என்பது வாழ்வியல் கூறுகளின் ஓர் அங்கமாக இருப்பதைக் குறுந்தொகைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றதைத் தெரிந்துகொள்கிறோம். மேற்கண்ட ஆய்வின் மூலமாக நீர் சார்ந்த வாழ்வியல் சங்க காலத்தில் பெரும்பான்மையான இடங்களில் பதிவாகியுள்ளதைத் தக்கச் சான்றுகளுடன் முன்னிருத்தப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1) சண்முகம்பிள்ளை.மு, (ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் பகுதி-1.
2) துரைசாமிப்பிள்ளை. ஔவை.சு, புறநானூறு மூலமும் உரையும் பகுதி-1.
3) கழக வெளியீடு, திருக்குறள் பரிமேலழகர் உரை,
4) துரைசாமிப்பிள்ளை. ஔவை.சு, ஐங்குநூறு மூலமும் விளக்கவுரையும்.
5) பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், நற்றிணை நானூறு மூலமும் உரையும்,